www.padippakam.com

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
## PEOPLE'S FRONT OF LIBERATION TIGERS

-P.F.L.T-

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
தலைமைச் செயலகம்
தமிழீழம்
14 . 06 . 1990

### அடக்குமுறைக்கெதிராக தொடர்ந்து போராடுவோம்

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எமது ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழ் பேசும் மக்களைப் பாதுகாப்பதற்காகவும், தமிழீழ விடுதலைக்காகவும் அன்றி வேறில்லை.

தமிழீழ விடுதலைக்காகவும், சிங்கள இந்திய ஆயுதப் படைகளின் தாக்குதலில இருந்தும், சமூகவிரோத, இனத்துரோகக் கும்பல்களின் துன்புறுத்தலினின்றும் தமிழ்பேசும் மக்களைக் காப்பதற்காகவும் இதுவரை 1500 ற்கும் மேற்பட்ட எமது இயக்க வீரர்கள் தமது இன்னுயிரை ஈந்துள்ளார்கள்; ஏராளமான வீரர்கள் கை, கால்களை இழந்து, இயங்க முடியாத நிலைக்குள்ளாகியிருக்கின்றனர்.

இரண்டரை ஆண்டு காலமாக தமிழீழ மக்களுக்கு சொல்லொணாக் கொடுமைகளை இழைத்து, தமிழ் பேசும் மக்களின் விடுதலைப்போராட்டத்தை நசுக்கிக்கொண்டிருந்த இந்தியப்படையினரை இந்த மண்ணை விட்டு விரட்டி அடிப்பதற்காக சிறீலங்கா அரசு நிபந்தனை அற்ற முறையில் எம்மைப்பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. நாம் எமது இலட்சியத்திற்கு எவ்வித ஊறும் நேராத வகையில், எவ்வித விட்டுக்கொடுப்புகளும் அற்ற நிலையில் சிறீலங்கா அரசோடு போர் நிறுத்தம் செய்து, பேச்சுவார்த்தை நடத்த முடிவெடுத்தோம்.

பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ் மக்கள் மீது பகைமை வெறுப்புணர்வுகளைக் கொண்டுள்ள சிங்கள இராணுவம் தமிழ் பகுதிகளில் இருப்பது பயனில்லை என்பதனையும், அவர்களினால் தமிழ் பேசும் மக்களுக்கு இன்னல்கள் விளைவிக்கப்படும் என்பதனையும் தொடர்ந்து எடுத்துரைத்து வந்தோம்.

இந்தியப் படையை எப்படியாயினும் வெளியேற்றியே ஆகவேண்டும் என்ற நெருக்கடியான நிலையில் தமிழீழப் பகுதிகளில் இருந்து சிங்களப் பொலிசாரை முற்றாகத் திருப்பி அழைப்பதற்கும், தமிழீழத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் எண்ணிக்கையையும், முகாம்களையும் குறைப்பதற்கும் சிறீலங்கா அரசு அந்த நேரத்தில் ஒப்புக்கொண்டது; சில பகுதிகளில் இருந்து சிங்களப் பொலிசாரையும் திரும்பப் பெற்றது.

ஆனால் இந்தியப்படை இங்கிருந்து அகற்றப்பட்ட பின்னர் சிறீலங்கா அரசு தான் ஒப்புக்கொண்டபடி செயற்படாதது மட்டுமல்ல, தற்போது தமிழீழப் பகுதிகளில் ஆயுதப்படைகளின் எண்ணிக்கையை குறைப்பதற்குப்பதிலாக, மேலும் மேலும் ஆயிரக்கணக்கான ஆயுதப்படையினரை கொண்டு வந்து குவிக்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றது.

பேச்சு வார்த்தையின் போது ஒப்புக்கொண்டபடி பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மை மூலம் எடுக்க வேண்டிய அரசியல் நடவடிக்கைகளை போதிய பெரும்பான்மை இன்மையால் சிறீலங்கா அரசு மேற்கொள்ள முடியாது தாமதப் படுத்துவதை நாம் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் தமிழ்ப் பகுதிகளில் இருந்து சிங்களப் பொலிசாரை திருப்பி அழைப்பது போன்ற நடவடிக்கைகளை சிறீலங்கா அரசு மந்தப்படுத்தி சிங்களப் பொலிசாரை தமிழீழப் பகுதிகளில் தொடர்ந்து நிலைகொள்ள வைத்திருப்பதானது சிறீலங்கா அரசின் உள்ளக் கிடக்கையை நன்கு புலப்படுத்துகின்றது.

கிழக்கு மாகாணத்தில் எமக்கும் சிங்களப் படைகளுக்குமிடையே நடைபெற்று வரும் இந்தப்போர் எம்மால் வலிந்து தொடங்கப்பட்ட ஒன்றல்ல. கொடுத்த வாக்குறுதிகளை மீறி சிறீலங்கா ஆட்சியாளர்களால் தமிழீழத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சிங்களப் பொலிசாரின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டுகையினாலும், விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளுக்கு அவர்கள் இடையூறு விளைவித்ததினாலுமே ஏற்பட்டது.

படிப்பகம்

கடந்த 12 . 06 . 90 அன்று போர் நிறுத்தத்தைக் கொண்டுவருவதற்கு எம்மோடு பேச்சு நடத்த சிறீலங்கா அரசு நீதி அமைச்சர் திரு ஹமீதை அனுப்பியது. பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருந்த அதேவேளையில் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் இன்னோர் அமைச்சர் எமது இயக்கத்தின் தலைவரை இனத்துரோகியான வரதராஜப்பெருமாளோடு ஒப்பிட்டு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதனையும் பொருட்படுத்தாமல் அமைச்சர் திரு ஹமீதுடன் பேசி போர் நிறுத்தத்தை மேற்கொள்வதென முடிவு செய்து நேரமும் குறித்தோம்.

ஆனால் சிங்கள அரசோ குறிப்பிட்ட நேரத்தில் போர்நிறுத்தத்தை மேற்கொள்வதற்குப்பதிலாக போரை தொடருவதற்கும், அதை விரிவுபடுத்துவதற்குமான செய்கையில் வேகமாக இறங்கியது.

சிங்கள அரசு முப்படைகளையும் ஏவிவிட்டு ஆகாய, கடல், தரை மார்க்கமாக தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருக்கிறது. மக்கள் அடர்த்தியாக உள்ள பகுதிகளில் விமான, செல் தாக்குதல்களினால் பொதுமக்களுக்கு பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. அம்பாறையில் சிங்கள ஆயுதப் படையினால் தமிழ் முஸ்லீம் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதுடன், நூற்றுக்கதிகமான மக்கள் வெட்டிக்கொல்லப்பட்டும் உள்ளனர்.

மேலும் 3000 க்கும் அதிகமான ஆயுதப்படையினரை கொழும்பிலிருந்து சிறீலங்கா அரசு கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

தமிழீழ மக்கள் மீது பெரும் தாக்குதலை நடத்திவரும் சிறீலங்கா அரசின் ஆயுதப் படையினருக்கெதிராக கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற போரில் எமது 45 வீரர்கள் களப்பலியாகியுள்ளனர்.

தமிழீழ மக்களின் விடுதலைக்காக வேள்வித்தீயில் தம்மை அழித்துக் கொண்ட எமது 45 வீரர்களுக்கு நாம் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறோம். சிறீலங்கா ஆயுதப்படையினருக்கெதிராக தொடர்ந்தும் எமது போராட்டத்தை நடத்துவதற்கு உறுதிபூண்டுள்ளோம்.

தமிழீழ மக்களுக்காக நாம் நடத்திவரும் போரில் பார்வையாளர்களாக இருந்து எம்மை பாராட்டுவதையோ, விமர்சனம் செய்வதையோ விட்டுவிட்டு தமிழீழ மக்கள் அனைவரும் பங்காளிகளாக மாறி இணைந்து செயற்படுமாறு வேண்டுகிறோம்.

தலைமைச்செயற்குழு
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

www.padippakam.com

படிப்பகம்